முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் அங்காரக பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.01.2019, புதன்கிழமை

1. **மக்களை காத்து வழிநடத்த**
**மாதவசியாக வந்த அரங்கனே**
**தேக்கமிலா உன் வழிமுறையை**
**தெய்வீக நெறியாக ஏற்று வரும்**
2. வருகின்ற மக்கள் எல்லோரும்
வருமுலகில் ஞான பலமடைவரெனக் கூறி
ஆறுமுக அரங்கமகா ஞானிக்கு
அங்காரக பகவான் யானும்
3. யானும் ஒளி சூட்சும நூலை
உயர்வான **விளம்பி கலை திங்கள்**
**ஞானம்பட மூவையோர் திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 16ம் நாள் 30.01.2019, புதன்கிழமை)**
**நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற**
4. நலம் தரும் ஆறுமுகப் பெருமான்
ஞானசக்தியாக வந்துள்ள அரங்கன்
பலம் தரும் அன்னதான சேவை ஏற்று
பணிந்து தருமவழி உதவி நின்று
5. நின்றுமே அரங்கா முருகா என
நித்ய பூசை செய்து கொண்டு
நன்றான அரங்கன் திருவடியில்
ஞான தீட்சை ஆசி பெற
6. ஆசி பெற அரங்கன் வழியில்
அரங்காரகனும் அருள் புரிவேன்
குசன் தோடமிடர் உள்ளவரெல்லாம்
குருராசன் ஏழாம்படை வீடு வந்து
7. வந்து வணங்கி அருளமுது உண்டு
வருபவர் எடை தானியமீந்து
சிந்தைபட அரங்க ஞானியரிடம்
சடாட்சர தீட்சை ஆசி பெற
8. ஆசி பெற தோடமிடர் விலகும்
அவரவர்க்கும் தடையில்லா நற்பலன்
ஆசிபெற சடுதி நடந்தேறும்
ஆசியினால் நற்குடி சிறப்பு
9. சிறப்பான வாரிசு பலமுடன்
செப்பிட மாங்கல்ய பலம் வளம்
மறுப்பிலா ஆயுள் கீர்த்தியும்
மண்ணுலகில் தடமிடம் பதவிநிலை

10. நிலையான வரவு வசதிகளும்
நிம்மதியான வாழ்வும் கண்டு சிறப்பர்
சளைக்கா ஆறுமுகன் காட்டும்
சன்மார்க்க நெறி வழி வருக

11. வருகவே மக்களுக்கு மேன்மையும்
வல்லமையான பாதுகாப்பும் பெருகி
ஆறுமுகன் ஆளும் யுகம் ஆகும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் செவ்வாய் பகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

உலக மக்களை கலியுகத்தின் துன்பங்களில் இருந்து காத்து வழிநடத்திடவே மகா தவசியாக அவதார ஞானியாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே தடையற்ற உமது தூய்மைமிக்க ஞானவழிமுறைகளை தெய்வீக நெறியாக ஏற்று பயபக்தியுடன் பின்பற்றி வருகின்ற மக்களெல்லோரும் வரும் உலகினில் ஞானபலத்தினை பெறுவார்கள் என உலகறிய கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 16ம் நாள் 30.01.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே செவ்வாய்பகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் செவ்வாய்பகவான்.

உலக மக்களுக்கு எல்லாவிதமான நலங்களையும் தந்தருளும் ஆறுமுகப் பெருமானின் அவதார ஞானசக்தியாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனார் உலக மக்களுக்கு சர்வபலத்தையும் தந்தருளும் தர்மபலம் பெருக்கும் அன்னதான பணிகளை அவரவரும் தமது பணிகளாக கடமையாக ஏற்று அரங்கன் திருவடி பணிந்து அரங்கன் ஆற்றும் தர்மங்களுக்கு பொருளுதவிகள் செய்தும் தொண்டுகள் செய்தும் உதவி நின்று ஆறுமுகனே அரங்கமகானே முருகா ஆறுமுக அரங்கமகா தேசிகனே என மனம் உருகி தினம்தினம் மறவாமல் பூஜைகளை செய்து வருவதுடன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடிகளிலே ஞானதீட்சைகளை பெற்று அரங்கன் திருவடி பணிந்து ஆசிகளையும் உபதேசங்களையும் பெற்று வாழ்வினில் அவற்றை கடைப்பிடித்து நடந்து வர, அவர்களுக்கு செவ்வாய் பகவானான யானும் அருள்புரிந்து காப்பேன்.

உலகினில் செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் எல்லாம், குருராசனாம் உலகப் பேராசான் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை உள்ளன்போடு நம்பிக்கையுடன் நாடி வந்து ஓங்காரக்குடிலையும் குடிலாசான் அரங்கனையும் பயபக்தியுடன் பணிந்து வணங்கி அருளாசிகளைப் பெற்று குடிலினிலே ஞானிகளை பூஜித்து ஞானஅமுதாக அருளமுதாக படைக்கும் குடில் உணவினை உண்டு ஆங்கே தர்மத்தில் பங்கு கொள்ளும்விதமாக வருபவர்கள் எடையளவு தானியத்தை (அரிசி) தானமாக அளித்து அரங்கரிடத்து சடாட்சர தீட்சை உபதேசம்தனை அடைந்து ஆசி பெற்றிட வேண்டும்.

அவ்விதமே அரங்கமகானிடத்து தீட்சை ஆசி பெற்றிட அவர்களுக்கு உண்டான செவ்வாய் தோஷம் விலகிவிடுமப்பா. அவரவர்க்கும் செவ்வாய்பகவான் எமது அருளினாலும் குருமகா சன்னிதானம் அரங்கமகானின் அருளாசியினாலும் தடைகள் எல்லாம் விலகி நற்பலன்கள் விரைந்து அவர்தம் வாழ்வினிலே உண்டாகிடுமப்பா.

தடைபட்ட திருமணங்கள் தடை நீங்கி நடந்தேறும், அரங்கன் ஆசியினால் நற்குடி சிறப்பு உண்டாகும், சிறப்பான நல்வாரிசுகள் பலமுடன் மாங்கல்யபலமும் சிறப்புடன் கூடி நிற்கும், ஆயுள் பலம் உண்டாகி நீடிய ஆயுளைப் பெறுவார்கள். நிலம் வீடு சொத்துக்களை வாங்கும் நல்யோகங்களை பெறுவார்கள். நிலையான வரவுகளும் செல்வநிலையும் வசதிகளும் பெருகிடும், நிம்மதியான அமைதியான சச்சரவுகள் இல்லாத வாழ்வினை வாழ்ந்து சிறப்படைவார்கள்.

ஆறுமுகன் அரங்கன் காட்டும் தூய சன்மார்க்க நெறியினை பின்பற்றி அவரவரும் தளராது கடைப்பிடித்து வரவர, உலக மக்களுக்கு மேன்மையான வாழ்வு உண்டாகும், வல்லமைகள் பெருகிடும், அருள்பாதுகாப்பும் பெருகி இந்த உலகமே முருகப்பெருமான் ஆளுகின்ற ஞானயுகமாக ஆகி உலகினில் ஞானஆட்சியும் உருவாகிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் செவ்வாய்பகவான்.

–சுபம்–